**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 07-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**(வாதி ஆஜர் இல்லை. 2ம் பிரதிவாதி ஆஜர். மற்ற பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

அ.வ.எண்.932/2015

வா.சா.1 சிவசண்முகம்

<u>**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**</u>

1. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 6ல் எனது தகப்பனார் தொழில் தொடங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அவர் எந்த வருடம் தொடங்கினார் என்பதை குறிப்பாக சொல்லிவில்லை என்று சொன்னால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 7ல் எதோ ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக சொல்லியுள்ளீர்கள் அது எந்த தேதி, வருடம் யார் யார் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் 1996ம் வருடம் என் தகப்பனார் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார். அதற்கு என்னிடம் எந்த ஆதாரங்களும் இல்லை.

2. ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததே இந்த வழக்கிற்காக சொல்லும் பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. மேலும் பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 7ல் ரியல் எஸ்டேட் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் தான் 6 முதல் 17 பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்பனை செய்ததாக குறிப்பிட்டுள்ளது பொய்யான சங்கதியாகும் என்று சொன்னால் சரியல்ல.

3. குடும்பத்தை விட்டு விலகி வாழ்ந்துவரும் நிலையில் குடும்பத்திற்கு எதிராக விரோதமாக செயல்பட்டு வரும் நிலையில் அவ்வாறு குறிப்பிட்டது தவறான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. 24.08.2009 தேதியில் கிரயமானது நான், 5ம் பிரதிவாதி மற்றும் வாதி என் மனைவியை விட்டு பிரிந்த பின்பு தான் மேற்படி கிரயம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

4. 2009ம் வருடம் நான் என் குடும்பத்துடன் ஒன்றாக இருந்தேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் தான் மேற்படி கிரயம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் குடும்பத்தை பிரிந்து வரும்போது இளவர் சொத்து என்பதால் அதுகுறித்து நீதிமன்றத்தில் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த கிரய சொத்தை விற்பனை செய்த பிறகும் இளவர் மீது வைப்பீடு தொகை எதுவும் வைத்து பராமரித்து வந்தீர்களா என்றால் இல்லை.

5. வாதி மற்றும் 5ம் பிரதிவாதி இளவராக இருந்தபோது அவர்கள் பங்கு பாகத்தையும் சேர்த்து நான் ஏற்படுத்திய வில்லங்க கிரயங்கள் எதுவும் மேற்படியார்களின் சட்டப்படி உரிமைகளை பாதிக்காது என்று சொன்னால் சரியல்ல. ஆரம்பம் முதலே இளவர்களின் நலனுக்கு விரோதமாக செயல்பட்டு வந்தநிலையில் தற்போதும் அவர்களது நலனுக்கு விரோதமாக பொய்யாக எதிர்வழக்காடி வருகிறீர்கள் என்றால் சரியல்ல.

6. நான் விவசாய குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால் சொத்துக்கள் வழிவழியாக வருவது பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா 7-1/2 ஏக்கர் சுயமாக சம்பாதித்த சொத்தாகும். மேலும் என் தாத்தா சொத்தில் 1-1/2 ஏக்கர் என் தந்தை சுயமாக சம்பாதித்த சொத்தாகும். மேற்கண்ட சொத்துக்கள் என் தந்தை சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்று கூறிய போதும் அதில் எங்களால் விற்பனை செய்யப்பட்ட சில கிரய ஆவணங்களில் என் தகப்பனார் உடன் நானும், என் உடன் பிறந்தவர்களும் கிரயதாரர்களாக கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

7. மேற்படி சொத்துக்கள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்ட கிரய ஆவணங்களில் எங்களுக்கு பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜிய சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தாத்தா சென்னிமலைக்கவுண்டர் சுயமாக சம்பாதித்தாக கூறியுள்ள போதும் அந்த சொத்தை பகுதி விற்பனை செய்தபோது கிரய ஆவணங்களில் எனது தகப்பனாரும், நானும், என் உடன்பிறந்தவர்களும் எங்களுக்கு பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜிய சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. அந்த கிரய ஆவணங்களில் பிதுராஜ்ஜிய சொத்து என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எங்களால் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணங்களுக்கு விரோதமாக சாட்சியமளிப்பது சட்டப்படி ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் பொது குடும்ப சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்கள் ஆகும். அது தனிநபர் வருமானத்தில் சம்மாதித்த ஆவணங்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

9. ரைஸ் மில் காலியிடத்தை வாங்கி எனது தந்தை வாங்கி கஸ்பா பேட்டையீல் ரைஸ் மில் கட்டினார். எந்த வருடம் காலியிடத்தை என் தந்தை வாங்கினார் என்றால் எந்த வருடம் வாங்கினார் என்று தெரியாது. 1977ல் என் தந்தையால் ரைஸ் மில் கட்டப்பட்டது. ரைஸ் மில் கட்டுவதற்கு முன்பே என் தந்தை வியாபாரம் செய்துகொண்டிருந்தார் என்பதற்கு ஆதாரம் கிடையாது என்றால் சரிதான்.

10. மேற்படி ரைஸ் மில் காலியிடத்தில் கட்டியதும், என் தந்தைக்கு பிதுராஜ்ஜிய சொத்தில் இருந்து வந்த வருமானத்தின் அடிப்படையில் தான் ரைஸ் மில் கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல என் தந்தை சுயமாக சம்பாதித்து கட்டினார். காலியிடம் வாங்கியதற்கும், ரைஸ் மில் கட்டியதற்கும் என் தந்தை வியாபாரம் செய்ததற்கும், ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதால் தான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆதாரம் கிடையாது.

11. எங்கள் பூமியில் விளையும் நெற்களை அந்த ரைஸ் மில்லில் தான் அரைத்துக்கொள்வோம் என்றால் சரிதான். ரைஸ் மில் என்பது பொது குடும்ப சொத்தாகும் என்பதால் அது என் தந்தையின் சுய சம்பாதியத்தில் ரைஸ் மில் கட்டப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

12. தாவா சொத்தில் வாதிக்குள்ள உரிமை போலவே 5ம்பிரதிவாதிக்கும் 12ல் ஒரு பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**